## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -09 | சைவ நெறி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) மாலும் அயனும் காணாத நீதியே வடிவினராக விளங்குபவர்
   1. விநாயகர் 2. சிவபெருமான் 3. பிரமா 4. விஸ்ணு

2) "பொறுத்தார் பூமியாழ்வார்" என்ற பொன்மொழி மூலம் வலியுறுத்தப்படும் விழுமியப்பண்பு
   1. அன்பு 2. கூட்டுப்பொறுப்பு 3. வாய்மை 4. பொறுமை

3) செங்கணானும் பிரமனும் தம்முள்ளே ............ என்ற தேவாரத்தைப் பாடியவர்
   1. சம்மந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

4) சிவபெருமான் மன்மதனை எரித்த தலம்
   1. திருவதிகை 2. திருநல்லூர்ப் பெருமணம்
   3. திருக்குறுக்கை வீரட்டம் 4. திருக்கடம்பூர்

5) திதிகளில் இடம் பெறாதது
   1. பிரதமை 2. மீனம் 3. பஞ்சமி 4. நவமி

6) சமயம் என்பது
   1. மனித நெறி 2. தெய்வநெறி 3. சைவநெறி 4. வாழ்க்கைநெறி

7) பூர்வகக் கிரியையில் ஒன்றாகக் கருதப்படாதது
   1. திருமணம் 2. சிராத்தம் 3. ஏடு தொடக்கல் 4. சோறூட்டல்

8) சோமவாரம் எனப்படுவது
   1. திங்கள் 2. செய்வாய் 3. புதன் 4. வியாழன்

9) வீட்டில் விளக்கேற்றும் போது பாடப்பட வேண்டிய பாடல்
   1. அன்னம் பாலிக்கும் 2. இல்லக விளக்கது
   3. சொற்றுனைவேதியன் 4. மாசில் வீணையும்

10) சைவசமயத்தவரின் இறுதி நோக்கம்
   1. மகிழ்ச்சியாய் இருத்தல் 2. பணம் சம்பாதித்தல்
   3. முத்தியடைதல் 4. பொறுமையுடன் இருத்தல்

11) தாயாரை இழந்தவர்களால் அனுட்டிக்கப்படும் விரதம்
   1. சித்தரைப் பூரணை 2. ஆடி அமாவாசை
   3. ஏகாதசி விரதம் 4. தை அமாவாசை



kalvi.lk

12) முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படுபவர்
1. ஆறுமுகநாவலர் 2. அருணாசலதேசிகர்
3. விவேகானந்தர் 4. விபுலானந்தர்

13) "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்று கூறும் நூல்
1. திருவாசகம் 2. பெரியபுராணம் 3. திருமந்திரம் 4. திருப்புராணம்

14) கோளறு பதிகம் பாடியவர்
1. சம்மந்தர் 2. அப்பர் 3. திருமூலர் 4. சேக்கிழார்

15) காப்பதோர் வில்லும் அம்பும் என்ற பாடல் மூலம் குறிப்பிடப்படும் நாயனார்
1. சிறுத்தொண்டர் 2. கண்ணப்பநாயனார்
3. அதிபத்த நாயனார் 4. குங்கிலியக் கலிய நாயனார்

16) பிரதமை முதல் பௌர்ணமி வரையுள்ள காலம்
1. தேய்பிறை 2. கிருஸ்ணபட்சம் 3. வளர்பிறை 4. அபரபட்சம்

17) சிவராத்திரி விரத கதையுடன் தொடர்புடைய மலர்
1. தாமரை 2. தாளம் பூ 3. அல்லி 4. முல்லை

18) இறை சிந்தனை வளர்க்கும் இடங்களாக அமைபவை
1. மடங்கள், பாடசாலை, மைதானம் 2. வீடு, கல்வி நிறுவனம், வைத்தியசாலை
3. வீடு, ஆலயம், பாடசாலை 4. வீடு, திணைக்களம், கோயில்

19) சைவ நெறியில் மிக மேலானதாக மதிக்கப்படுவது
1. அன்பு 2. துறவு 3. அறிவு 4. வாய்மை

20) கஞ்சித் தொட்டித் தர்மம் மேற்கொண்டவர்
1. விபுலானந்தர் 2. ஆறுமுகநாவலர்
3. மங்கையற்கரசியார் 4. திருமூலர்

(20ல 2ஶ்ரீ 40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) சுருக்கமான விடை தருக.

1) தேவார முதலிகள் யாவர்?

2) ஈழத்தில் காணப்படும் பஞ்சாங்கங்கள் எவை?

3) அருணாச்சல தேசிகரின் தாய், தந்தை பெயர் யாது?

4) திருவள்ளுவர் தென்புலத்தார் என்று யாகைக் குறிப்பிடுகிறார்?

5) படிக்காசு பெற்று பஞ்சம் போக்கிய நாயன்மார்கள் யாவர்?

6) தேவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக செய்யப்படுவது யாது?

7) முப்பொருள்கள் எவை?

8) பிதிர்க்கடன் நிறைவேற்ற உகந்த தலங்கள் 2 தருக?

9) நாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த கொடுமைகள் எவை?

10) பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்கு முறையைத் தருக?

(10x2=20 புள்ளிகள்)

02) பின்வரும் தேவாரங்களில் இரண்டை வரிக்கிரமமாக எழுதி அவற்றைப் பாடியவர் பெயர், தலம், என்பவற்றைத் தருக.

1) துஞ்சலும் துஞ்சல் இல்லாத.......................

2) காதாலாகிக் கசிந்து.....................

3) இல்லக விளக்கது......................

4) காப்பதோர் வில்லும் அம்பும்........................

தேவாரம் :- 4 புள்ளிகள்
பாடியவர், தலம் :- 1 புள்ளி
மொத்தம் :- 5x2=10 புள்ளிகள்

03) "கடவுளே மெய்ப்பொருள்"

1) பிரமாவிற்கும் விஸ்ணுவிற்கும் முரண்பாடு ஏற்படக் காரணம் யாது?

2) இறைவனின் ஒளிப்பிழம்பில் இருந்து வந்த அசரிரி யாது?

3) இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பிட்டு அவற்றை ஆற்றும் மூர்த்தங்களையும் குறிப்பிடுக?

4) அடிமுடி தேடிய கதையுடன் தொர்டர்புடைய விரதங்கள் எவை?

(2+2+3+3=10 புள்ளிகள்)



kalvi.lk

04) "ஒழுக்கம் விழுப்பம் தரும்"

1) மனிதனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் 4 தருக?

2) வாழ்க்கையின் 4 நிலைகளும் எவை?

3) விருந்தோம்பல் பண்பின் மூலம் மேன்மையடைந்த நாயன்மார்கள் மூவரைக் குறிப்பிடுக?

4) இல்லறத்தான் செய்யும் பிதிர்வழிபாடுகள் மூன்று தருக?

(2+2+3+3=10 புள்ளிகள்)

05) "நாளும் கோளும் நம்மடியார்களுக்கு நலிவு செய்யா"

1) பஞ்சாங்கங்கள் கொண்டுள்ள ஐந்து அம்சங்களும் எவை?

2) யோகம் என்றால் என்ன?

3) நட்சத்திரங்கள் எத்தனை? நான்கின் பெயரைக் குறிப்பிடுக?

4) பஞ்சாங்கம் பார்த்து நாம் செய்யும் கருமங்கள் 5 தருக?

(2+2+3+3=10 புள்ளிகள்)

06) "சைவத்தை மேன்மையுறச் செய்தவர்கள் பெரியார்கள்"

1) ஐந்தாம் குரவர் என அழைக்கப்படுபவர் யார்?

2) சைவம் வளர்த்த பெரியார்கள் நால்வரைக் குறிப்பிடுக?

3) அருணாச்சலதேசிகர் எங்கே? எப்போது பிறந்தார்?

4) அருணாச்சல தேசிகருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்ட பட்டங்கள் எவை?

(2+3+2+3=10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**